மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02-ம் நாள் வியாழக்கிழமை
அ.வ.எண். 136/21
பி.சா.2

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

-----------------------------------------------------------------

| | |
|---|---|
| பெயர்: கிறிஸ்டி | தேதி : 02.04.26 |
| வயது : | த/பெ :கோயில்பிள்ளை |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

-----------------------------------------------------------------

**<u>02.04.26 குறுக்கு விசாரணை</u>**

1.வாதிகள் பிரதிவாதிகள் மீது பாகபிரிவினை கேட்டு வழக்கு போட்டுள்ளனர் என்றால் சரிதான். வாதிகள் மாசிலாமணியின் வாரிசுகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மாசிலாமணியின் உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். கோயில்பிள்ளை, ஜோயல்பிரசன்னா, கிறிஸ்டி, ஹெர்லின் ராணி ஆகியோர் 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் என்றால் சரிதான். தேனம்மாள் என்பவர் மாசிலாமணி மற்றும் 1ம் பிரதிவாதியின் தாயார் என்றால் சரிதான்.

2.வழக்கு சொத்து 30.09.1970 ல் தேனம்மாள் பெயருக்கு ஆபிரகாம், ஆல்பர்ட், மாணிக்கம், முத்தையா ஆகியோர் நன்கொடை பத்திரம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். மேற்படி ஆபிரகாம், ஆல்பர்ட், மாணிக்கம், முத்தையா ஆகியோர் தேனம்மாளின் சகோதரர்கள். தபசில் சொத்தின் விஸ்தீரணம் 72 செண்ட் என்றால் சரிதான். அதில் 58 செண்ட் மட்டும் தான் மேற்படி நன்கொடை பத்திரம் மூலம் தேனம்மாளுக்கு பாத்தியம்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.02 19:22:26 +0530

என்றால் சரிதான். மீதம் உள்ள 14 செண்ட் தேனம்மாளுக்கு வாரிசு அடைப்படையில் பாத்தியம் என்றால் சரிதான்.

3.தேனம்மாள் வழக்கு சொத்தினை அவரது காலம் வரை எந்தவித ஏற்பாடும் செய்து வைக்காமல் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். என் அப்பா காவல் துறையில் பணியில் சேர்ந்து தலைமை காவலராக ஓய்வு பெற்றவர். தேனம்மாளின் கணவர் யோசேப்பு 1984 ல் இறந்தார் என்றால் சரிதான். மேற்படி யோசேப்புக்கு தேனம்மாள், மாசிலாமணி, ஞானபுஷ்பம் ஆகியோர் மட்டும் தான் வாரிசு என்றால் சரிதான். மாசிலாமணி 05.07.2000 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

4.தேனம்மாள் 20.09.2005 ல் இறந்தார் என்றால் சரிதான். தேனம்மாளுக்கு மாசிலாமணி மற்றும் ஞானபுஷ்பம் ஆகியோரை தவிர வேறு வாரிசுகள் கிடையாது என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். தேனம்மாளின் சொத்தில் கிறிஸ்தவ சட்டப்படி மகனுக்கு பாதி பங்கும், மகளுக்கு பாதி பங்கும் உண்டு என்றால் சரிதான். ஞானபுஷ்பம் அம்மாள் இறந்தபிறகு தான் எங்களை கட்சி சேர்த்தனர் என்றால் சரிதான். நான் தனிப்பட்ட முறையில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5.ஹெர்லின் ராணி மற்றும் ஜோயல்பிரசன்னா ஆகியோர் தோன்றா தரப்பினராக உள்ளனர் என்றால் சரிதான். என் அம்மா எதிர்வழக்குரையில் என்ன சங்கதிகள் சொல்லியுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.02 19:22:29 +0530

சரிதான். என் அப்பா அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடன் என் தந்தை நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். என் தாயார் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாததால் அது குறித்து என்னால் பதில் கூற இயலாது என்றால் சரிதான்.

6.நான் திருமணம் ஆகி எந்த வருடத்தில் இருந்து புளியங்குடியில் வசித்து வருகிறேன் 2021ல் இருந்து வசித்து வருகிறேன். பிரபாகர் என்பவர் என்னுடைய சகோதரர் என்றால் சரிதான். அவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரது வாரிசுகள் தான் 4, 5 பிரதிவாதிகளான ஹெர்லின் ராணி மற்றும் ஜோயல் பிரசன்னா என்றால் சரிதான். தபசில் சொத்தை மாசிலாமணியின் வாரிசுகள் மற்றும் 1ம் பிரதிவாதியின் வாரிசுகளுக்கு பாதி பாதி பாகம் உள்ளது என்றால் சரிதான்.

7.பாகபிரிவினை செய்து கொள்வதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.02 19:22:31 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.